TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 APR 1972
MADRAS

TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Saturday, the 23rd October 1971.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Soft Drinks

*19. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the sale of sub-standard soft drinks on roadsides in Madras City; and

(*b*) if so, the action taken thereon?

குளிர்ப் பானங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரம், சாலையோரங்களில் தரக்குறைவான சோடா, கலர் போன்ற குளிர்ப் பானங்கள் விற்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அடிக்கடி திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டு தரக்குறைவானவை என்று கருதப்படுபவையும் சுகாதாரக் கேடான நிலைமைகளில் விற்கப்படுபவையுமான சோடா, கலர் போன்ற பானங்கள் சென்னை மாநகராட்சியால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி தரம் குறைந்த குளிர் பானங்கள் மட்டுமல்லாமல், பல போலி குளிர் பானங்கள் விற்கப்படுவதாகத் தெரிகிறது. அதாவது கோககோலா ஃபேண்டா போன்ற பானங்கள் என்று சொல்லி ரயில்வே நிலையங்களிலும் மற்ற இடங்களிலும் அதே கோககோலா பாட்டில்களில், வேறு ஏதோ பானங்களை நிரப்பி விற்றுவருகிறார்கள். அதையும் தடை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் சொன்ன இந்தக் கருத்து இலாகாவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படச் செய்வதற்கு நான் முயற்சிப்பேன்.

[23rd October 1971

THIRU D. SANTOSHAM : Sir, the Prevention of Food Adulteration Act is being used effectively in the case of the regular shop keepers and big manufacturers and that is right. But more than the big manufacturers and regular shop keepers, it is the petty vendors who sell the common sweets in front of the schools, the most pernicious stuff which is most often adulterated with harmful stuff which will spoil the health of the pupils. May I know whether there is any scheme for Statewide drive against this kind of sale to school children by the petty vendors?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போதே பெரும்பாலான நகராட்சிப் பகுதிகளில் அப்படிப்பட்ட விற்பனைகளைத் தடை செய்வதற்கான முறைகள் இருக்கின்றன. அதை நிர்வகிக்கிறவர்கள், நகரசபையில் பொறுப்பில் உள்ளவர்கள் அதைத் தடுப்பதற்கு எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறார்களோ அந்த அளவுக்குத்தான் அது நிறைவேற்றப்படும். பொதுவாகக் கிராமப் பகுதிகளில் இதை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது. நகரப் பகுதிகளில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சோடா, கலர் போன்ற பானங்கள் விற்கும் கடைகளில் பழ ரசம் என்ற பெயரால் போதை வஸ்துக்கள் விற்கப்படுவதாகத் தெரிகிறது. அதையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பழ ரசம் என்ற பெயரில் மது விற்கப்படுகிறது என்கிறார்கள். அது தடுக்கப்பட வேண்டும். ஒரு பொருள் எந்தப் பெயரில் விற்கப்படுகிறதோ அந்தப் பொருள்தான் விற்கப்படவேண்டும். அந்தப் பொருளின் பெயரில் வேறு பொருள்கள் விற்கப்படுகின்றன என்றால், அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Aerial Spraying

* 20. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the aerial spraying operations in the State have been leased out to private parties and firms for the year 1970–71; and

(*b*) if so, the details thereof?

விமானம் மூலம் மருந்து தெளித்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் விமானம் மூலம் மருந்து தெளிப்பது 1970–71 ஆண்டில் தனியாருக்கும், நிறுவனங்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?